**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**MCOP 197 /2023**

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 ஆம் நாள் வியாழக்கிழமை

எ.ம.**சா.1** இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஆதித்ய விஸ்வா | த/பெ.: | சேதுராமன் |
| கிராமம்: | தஞ்சாவூர் | தாலுக்கா: | தஞ்சாவூர் |
| மதம்: | இந்து | தொழில்: | நியூ இந்தியா அசுரன்ஸ் கம்பெனி, நிர்வாக அதிகாரி |
| வயது: | 24 | முகவரி: | தஞ்சாவூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 13.02.2025.

**முதல் விசாரணை:_**

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 21.11.2017 | சுகந்தி காவல் துறையில் அளித்த புகாரின் பெயரில் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை | நகல் |

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.2 | 08.07.2013 | இந்து திருமண அசல் மனு எண். 98/2012 என்ற வழக்கில் ஏற்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணை (மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரர் கோமதி என்பவருக்கும் இறந்துபோன இராஜன் என்பவருக்கும் விவகாரத்து ஏற்படவில்லை என்றும், இறக்கும் வரை ஒன்றாகதான் இருந்து வந்தார் என்றும் மேற்படி ஆவணம் நகலை குறியீடு செய்ய முடியாது என ஆட்சேபனை தெரிவித்து ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) | நகல் |
| எ.ம.சா.ஆ.3 | | திருப்பூர் வாகன விபத்தின் இழப்பீடு கோரும் உரிமை தீர்ப்பாயம் தாக்கல் செய்யப்பட்ட முதல் வழக்கு எண். MCOP 1771/2018 மனு | நகல் |

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளபடி செய்யவேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

## மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கு விபரம் கோப்புகளின் அடிப்படையில்தான் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கின் புலனாய்வு அறிக்கை நிறுவனம் வசம் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 ஆவணத்தில் 1ம் மனுதாரர் கோமதி, 2ம் மனுதாரர் வசந்த் ஆகியோர்கள் வாரிசுதாரர்களாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள திருப்பூர் நீதிமன்ற MCOP No.1771/2018 மனு நகலில் எ.ம.சா.ஆ.3 ஆவணத்தில் முதல் தகவல் அறிக்கையை தவிர வேறு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி எ.ம.சா.ஆ.3 ஆவணத்தின்படி அந்த மனுவில் கண்ட மனுதாரர்கள் இறந்து போன இராஜன் என்பவருக்கு உண்மையான வாரிசுதாரர்களாக இருந்திருந்தால் வாரிசு சான்றிதழ், திருமண சான்றிதழ் தாக்கல் செய்து இருப்பார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.7 ஆவணத்தில் 1ம் மனுதாரர் கோமதி என்பவர் தான் மனைவி என காட்டப்பட்டுள்ளது என்றால் 2013ல் 1ம் மனுதாரர் கோமதிக்கும், ராஜன் என்பவருக்கும் விவாகரத்தது ஆகிவிட்டது. விபத்தில் இறந்துபோன இராஜன் என்பவருக்கு திருப்பூர் மாவட்டம்

அவினாசி பேருராட்சி அலுவலகத்தில் 08.12.2017ல் இறப்பு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். **அது ம.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ம.சா.ஆ. 10 ஆவணத்தில் மனைவியின் பெயர் என்ற இடத்தில் சுகந்தி என்பவரின் பெயர் குறிப்பிடபடவில்லை என்றால் யார் பெயரையும் குறிப்பிடபடவில்லை. 02.03.2024ல் திருப்பூர் நீதிமன்றத்தில் MCOP No.1771/2018ல் என்ற வழக்கில் மனுதாரர் தரப்பில் Not Pressed குறிப்பாணை தாக்கல் செய்து அந்த வழக்கு Not Pressed செய்யப்பட்டதற்கான **கணிணி நகல் ம.சா.ஆ. 11 ஆகும்.** என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.8 ஆவணத்தில் 2ம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழில் தாய், தந்தை பெயர் கோமதி–ராஜன் என உள்ளது. எங்கள் புலனாய்வு அறிக்கையில் இறந்துபோன இராஜன் என்பவருக்கு சுகந்தி மனைவி என்பதற்கான திருமண சான்று உள்ளதா என்றால் இல்லை. எ.ம.சா.ஆ. 3 ஆவணத்தில் உள்ள 2,3 மனுதாரர்கள் ராஜனின் குழந்தைகள் என்பவதற்கு வாரிசு சான்றிதழ் எங்களிடம் உள்ளதா என்றால் இல்லை. இறந்துபோன ராஜன் என்பவரிடம் கோமதி என்பவர் சேர்ந்து வாழ்ந்தார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.2 ஆனது ஒருதலைபட்ச தீர்ப்பானை என்றால் சரிதான். அந்த மனு குறித்து 1ம் மனுதாரர் கோமதிக்கு நீதிமன்றத்திலிருந்து எந்த நகலும் சார்வு செய்யப்படவில்லை என்றும், அவருக்கு ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. இறந்து போன இராஜன் என்பவருக்கு இந்த மனுவில் கண்ட மனுதாரர்கள் மட்டுமே வாரிசுதாரர்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர்களுக்கு உரிய இழப்பீடு கொடுக்க 2ம் எதிர்மனுதாரர்கள் கடமைபட்டவர் என்றும், இழப்பீடு கொடுப்பதற்கு தப்பிப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.